ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2124/40 - 2019 මැයි මස 24 වැනි සිකුරාදා - 2019.05.24

*2124/40 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**தேசிய அரசுப் பேரவையின் 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டம்**

*27அ என்னும் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழான கட்டளை*

*1981 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க காணிச் சீர்திருத்த (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான தேசிய அரசுப் பேரவையின் 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் 27அ என்னும் பிரிவின் (4) ஆம் உப்பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான் இக்கட்டளை மூலம் :-*

*(அ) 1958 ஆம் ஆண்டு 4 ஆம் இலக்க அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளதுமான, இதற்கான முதலாம் அட்டவணையில் இன்னும் விபரமாக விவரிக்கப்பட்ட வலகன்தூவ வத்தை என்று அழைக்கப்பட்டு அறியப்படுவதும் மற்றும் குறிப்பிடப்படும் காணி சம்பந்தமான 1994, ஏப்பிறல் 21 ஆந் திகதிய 815/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையை, மேற்கூறப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் 27அ (1) ஆம் பிரிவின் கீழ் கையளிக்கப்பட்ட காணிப் பகுதியை இதற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டதுமான வலகன்தூவ வத்தை என்று அழைக்கப்படும் காணியானது அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குக் கையளிப்பதற்காக மீள்நிறுவலுடன் தொடர்புடைய நியதிகளுக்கு அல்லது நிபந்தனைகளுக்கு ஏற்ப செயற்படுத்தாதிருந்தமையின் அடிப்படையில் இரத்துச் செய்வதன் மூலம் அத்தகைய கட்டளைகளை இத்தால் திருத்துகின்றேன்.*



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ஆ) இது இரத்துச் செய்வதன் பின்னர் இதற்கான இரண்டாவது அட்டவணையில் விபரமாக விவரிக்கப்பட்ட காணி அளவினை காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிடம் மீண்டும் கையளிக்கப்படுவதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
"மிஹிகத்த மெதுர",
இல. 1200/6, காணிச் செயலகம்,
இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, மே 23.

**முதலாவது அட்டவணை**

அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கப்பட்ட வலகந்தூவ வத்தை என அறியப்படும் காணியின் விபரம்

| அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் இலக்கமும் திகதியும் | காணியின் பெயர் | மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்ட காணியின் அளவு ஹெக்டயார் |
|---|---|---|---|---|
| 815/10 21.04.1994 | வலகந்தூவ வத்தை | காலி | அக்மீமன | 401 |

**இரண்டாவது அட்டவணை**

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு மீள உரித்தாக்கப்படுகின்ற காணியின் பரப்பளவு

| விசேட இலக்கம் | காணியின் பெயர் | மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | கிராம அலுவலர் பிரிவு (கிராமம்) | காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு உரித்தாக்கப்படுகின்ற காணியின் பரப்பளவு |
|---|---|---|---|---|---|
| கொ/570 | வலகந்தூவ வத்தை | காலி | அக்மீமன | யக்கஹ அக்மீமன வலகந்தூவ | தென் மாகாணம், காலி மாவட்டத்தில், அக்மீமன பிரதேச செயலாளர் பிரிவில் யக்கஹ, அக்மீமன, வலகந்தூவ எனும் கிராமங்களில் அமைந்துள்ள உரித்து வரைபட இல. 83111, ஆ.வ. 537 உ.வ. 119223 உ. வ. 91328, உ. வ. 83517, உ. வ. 103839, ஆ. வ. 352, ஆ. வ. 1251, உ. வ. 103842, ஆ. வ. 353, உ. வ. 103841, உ. வ. 152975, 124888, 119212, 119213, ஆ. வ. 1428, ஆ. வ. 1478, உ.வ. 103843, 83106, 83109, 83108, 83194, ஆ. வ. 357, ஆ. வ. 986, உ. வ. 110504, உ. வ. 83107, உ. வ. 105051, ஆ. வ. 942, உ. வ. 83197 ஆகிய இலக்கமுடைய வரைபடங்களில் காட்டப்பட்ட பரப்பளவு உட்பட்டு ஹெக்டயார் 401 விஸ்தீரணமுடைய வலகந்தூவ வத்தை எனும் காணித்துண்டு |

06-169

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.